I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES R.W.1( on behalf of R3)
M.C.O.P.NO.523/2017

| | | |
|---|---|---|
| Name | : | Mrs. Dhanalakshmi |
| Occupation | : | Inspector of police |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.03.2025

**விசாரணை தொடங்கிய நேரம் :** 03.40 p.m

**முதல் விசாரணை**

நான் சிடி பைல்கள் எடுத்து வந்துள்ளேனா என்றால் சரிதான். 20.11.2010 அன்று மாலை 05.30 மணிக்கு திருவண்ணாமலையில் தாலூக்கா காவல் நிலைய எல்லைக்குட்பட்டு சத்திரம் என்ற இடத்தில் விபத்து நடந்தது என்றால் சரிதான் தாலூக்கா காவல் நிலையத்திற்கு புகார் வந்தது. அந்த புகாரில் எந்த எந்த கார்களுக்கிடையே விபத்து ஏற்பட்டது என்று சொல்லியுள்ளார்களா என்றால் 2 வாகனங்களுக்கு இடையேதான். அதில் TN 72 AD 0707 என்ற கார் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு எதிரே வந்த suzuki swift car KA 02 ME 1150 என்ற கார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கார் தான் எதிரில் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து எதிரே வந்த TN 72 AD 0707 என்ற வண்டியில் மோதிவிட்டது என்றால் சரிதான். புகாரில் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் ராமகிருஷ்ணன் கொடுத்துள்ளார். அதன் பிறகு அந்த முதல் தகவல் அறிக்கையின் பேரில் உயர்நீதிமன்றத்தில் Crl.O.P.No. 16539/2011 என்பதை கார் ஓட்டுனர் சந்தீப் என்பவர் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

அந்த வழக்கில் என்ன முடிவு செய்தார்கள் என்றால் குற்றப் புலனாய்வு துறை குற்றப்பிரிவு CBCID க்கு மேல் விசாரணைக்காக மாற்றம் செய்யப்பட்டது. அதன் பிறகு திருவண்ணாமலை நீதுமன்றத்தில் நீதித்துறை நடுவர் எண். 1 ல் ஆண்டு பட்டிகை வழக்கு எண். 98/2013 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

CBCID புலன் விசாரணை செய்து பட்டிகை வழக்கு எண். 98/2013 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் சந்தீப் என்பவர் குற்றம் சுமத்தப்பட்டவர் என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு 26.09.2016 அன்று குற்றம் சாட்டவர் குற்றவாளி இல்லை என்று விடுதலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கிற்கு பிறகு யார் பெயரில் எந்த வண்டி இடித்தது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் எங்கள் புலன் விசாரணையில் சந்தீப் எதிரி என்று வழக்கு தாக்கல் செய்தோம். இந்த வழக்கில் யாரால் விபத்து ஏற்பட்டது என்று சொல்ல இயலுமா என்றால் ஏற்கனவே புலன் விசாரணை செய்த அதிகாரி சந்தீப் தான் எதிரி என்று தெரியவந்தது.

இந்த வழக்கு முடிந்த பிறகு விபத்திற்கு யாருடைய கவன குறைவு காரணம் என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. யாருடைய கவன குறைவு விபத்திற்கு காரணம் என்ற சொல்லாததால் 3 வது எதிர் மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் எந்த வித இழப்பீடும் தர வேண்டியதில்லை என்றால் எங்கள் விசாரணையின் படி சந்தீப் தான் எதிரி என்ற தெரியவந்தது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

CBCID விசாரணை செய்து தாக்கல் செய்த வழக்கில் சந்தீப் என்பவருக்கு நீதிமன்றத்தில் விடுதலை கிடைத்துவிட்டது என்றால்

சரிதான். நாங்கள் உயர்நீதிமன்ற உத்தரவு படி தான் CBCID விசாரித்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். சந்தீப் 05.12.2010 அன்ற கொடுத்த புகாரின் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் உயர் நீதிமன்றத்தில் CBCID விசாரணை கேட்டு உத்தரவு வழங்கப்பட்டது என்றால் 20.11.2010 அன்று திருவண்ணாமலை தாலுக்கா காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து 29.11.2010 அன்று அந்த வழக்கில் சந்தீப் என்பவரை எதிரியாக கைது செய்து பிறகு பிணையில் விட்ட பிறகே 05.12.2010 அன்று மனு கொடுத்துள்ளார். அந்த மனுவை கொண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு மேல் விசாரணை செய்ய மனு தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சி சொல்கிறார்.

மேற்படி தேதியில் புகார் அளித்த பிறகு தான் 17.12.2010 அன்று சந்தீப்பின் தாயார் இறந்தார் என்றால் சரிதான். உயர்நீதிமன்ற உத்தரவில் என்ன நிபந்தனை விதித்து எங்களுக்கு உத்தரவு வழங்கினார்கள் என்றால் this court directs the further investigation to be conducted by the CBCID police என்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அந்த உத்தரவிலேயே எஸ்.பி தகுந்த புலன் விசாரணை அதிகாரியை நியமனம் செய்து அதை மேற்பார்வை செய்ய வேண்டும் என்று கண்டுள்ளதாக என்றால் சரிதான். மனுதாரர் சந்தீப் புகார் அளித்ததன் பேரில் எதாவது நடவடிக்கை காவல் துறையில் எடுக்கப்பட்டதா என்றால் ஏற்கனவே தாலூக்கா காவல் நிலையத்தில் எதிரி என்று கைது செய்யப்பட்டு இருந்ததால் CBCID க்கு மாற்றம் செய்யப்பட்டு முதலில் அவரை தான் அழைத்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்கள்.

சந்தீப் கொடுத்த புகாரின் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் தாலூக்கா காவல் நிலையத்தில் அவர் எதிரி என்பதால் அவர் கொடுத்த புகாரின் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வில்லை. அந்த கோப்பில சேர்த்துள்ளார்கள். அவர் இந்த வழக்கில் இருப்பதால் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க கூடாது என்று விதிமுறைகள் உள்ளதா என்றால் அவ்வாறு இல்லை ஆனால் ஒரே சம்பவத்தை குறித்து மனு கொடுத்துள்ளதால் அந்த மனுவை கோப்பு செய்துள்ளார்கள். ஒரே சம்பவம் என்றாலும் அவர் கூறியிருப்பது வேறு ஒரு தகவல் என்றால் சரியல்ல அது அந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்டது. ராமகிருஷ்ணன் என்பவர் காவல்த்துறையில் பணி செய்து வந்தார் என்றால் புகாரில் அவ்வாறு தான் உள்ளது. அவர் காவல் துறையில் இருப்பதால் தான் அவருக்கு சாதகமாக விசாரணை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் :** 04.10 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.